**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | செல்வகுமாரி |
| Father's Name/Husband Name: | தெய்வம் |
| Village : | திருமாந்துறை |
| Taluk : | குன்னம் |
| Age : | 29/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 என்னுடைய அம்மா. எதிரிகள் என் வீட்டிற்கு எதிர் புறமாக குடியிருந்து வருகிறார்கள். நான் வேலைக்கு செல்வதற்காக என்னுடைய அம்மாவுடன் வெளியே வந்தேன், அப்போது எதிரி சக்திவேல் எங்களை பார்த்து காரி துப்பினார். வேலைக்கு சென்றுவிட்டு மாலை 05.00 மணியளவில் நான் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது எதிரி சக்திவேல் மீண்டும் என்னை பார்த்து காரி துப்பி கெட்ட வார்த்தையால் என்னை பேசினார்.

என்னுடைய அம்மா எதிரி சக்திவேலிடம் எதற்காக இப்படி செய்கிறாய் என்று கேட்டதற்கு அதற்கு எதிரி சக்திவேல் அப்படிதான்டி தேவடியா செய்வேன் என்று கெட்ட வார்த்தையால் திட்டி என்னை அடித்து கீழே தள்ளினார். சம்பவயிடத்திற்கு வந்த எதிரி ரேவதி கட்டையை எடுத்து வந்து என்னுடைய இடது காலிலும்,

தாவாக்கட்டையிலும் அடித்தார். அதனால் நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். அங்கு வந்த எனது அம்மா எதிரிகளிடம் எதற்காக இப்படி அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எனது அம்மாவை கீழே தள்ளி சக்திவேல் அவருடைய முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அவர்மீது உட்கார்ந்து அவருடைய வலது கையில் கடித்து விட்டார், பிறகு அருவாளை எடுத்துவந்து உங்களை என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்.

வலி தாங்க முடியாமல் நான் கத்தியவுடன் அருகிலிருந்த நேசமணி, காசிநாதன் மற்றும் சிலர் ஓடி வந்து எங்களை தூக்கி விட்டார்கள். அதன்பிறகு எனது அண்ணன் பிரபாகரனுக்கு போன் மூலம் அருகிலிருந்தவர்கள் தகவல் சொன்னார்கள், தகவல் தெரிந்து அவர் வந்து என்னையும், எனது அம்மா அ.சா.1யையும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். மருத்துவமனை வந்த போலிசார என்னையும் எனது அம்மாவையும் விசாரித்துவிட்டு எனது அம்மாவிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.